**செய்தி வெளியீடு எண். 336** **நாள்: 17.04.2010**

## ரூபாய் 806 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டத்திலுள்ள 3 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள், 1430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்

அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் 22வது கூட்டம் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (17.04.2010) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அதில், காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, மதுரை மாவட்டத்திலுள்ள 3 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள், 1430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

முதலில், மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், எ.வெள்ளாளப்பட்டி, பரவை, விளாங்குடி, திருநகர் பேரூராட்சிகள் மற்றும் 155 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டமாக ரூ. 291.31 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தினை மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 1275 ஊரகப்பகுதிகளுக்கும் நீட்டித்திடும் வகையில் திருத்தி வடிவமைக்க முடிவுசெய்யப்பட்டது.

தற்போது, இத்திட்டமானது காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் ஆகிய 3 நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, பரவை, விளாங்குடி, திருநகர் பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஆகிய 6 பேரூராட்சிகள், 1430 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் என திருத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு ரூ.806.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 22.03.2010 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இன்று நடைபெற்ற அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

விரைவில் இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இக்குழுவின் கூட்டத்தில் நிதித்துறை முதன்மை செயலாளர் திரு.ஞானதேசிகன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் டாக்டர்.நிரஞ்சன்மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங், இ.ஆ.ப., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அரசு செயலாளர் திருமதி. அனிதா ப்ரவீன், இ.ஆ.ப., மற்றும் குடிநீர் வாரிய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மதுரை மாவட்டத்திலுள்ள 3 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள், 1430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பேரூராட்சிக்கான ரூபாய் 806 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் தொடர்பாக அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் 22வது கூட்டம் நடைபெற்றது. இக்குழுவின் கூட்டத்தில் நிதித்துறை முதன்மை செயலாளர் திரு.ஞானதேசிகன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் டாக்டர் .நிரஞ்சன்மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங், இ.ஆ.ப., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அரசு செயலாளர் திருமதி. அனிதா ப்ரவீன், இ.ஆ.ப., மற்றும் குடிநீர் வாரிய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.